தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1975 அக்டோபர் 27.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 66, 67, 68 பிறகு எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது வினா 69 எடுத்துக் கொள்ளப்படுகிறது.

அரசு மருத்துவ மனைகள்

* 69 வினா—**திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலிலுள்ள தலைமை மருத்துவ மனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நாகர்கோவிலிலுள்ள தலைமை மருத்துவ மனையில் 60 படுக்கைகள் கொண்ட பகுதியும் இரட்டை அரங்கு அறுவைக்கூடமும் ரூ. 8.00 இலட்சம் செலவில் கட்ட அரசு ஏற்கெனவே ஒப்புதல் வழங்கியுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இப்பொழுதிருக்கின்ற ஹெட்க்வார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி கட்டடம் இட நெருக்கடியுள்ளதாக இருக்கிறது. அதை கன்வீனியன்ட் ஸ்பேஸ் உள்ள இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்ற ஒரு தவறான சிந்தனை ஏற்பட்டு, அந்த அடிப்படையில் நீண்ட நாட்களாக எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படாமல் தவக்கம் ஏற்பட்டுவிட்டது. நாகர் கோவிலில் நிலம் வாங்குவதென்றால், நிலம் வாங்குவதற்கே ஏழு, எட்டு இலட்ச ரூபாய் விலை தர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அங்கு பொது மக்கள் சார்பில் யாராவது இடம் வாங்கித் தருவதாக இருந்தாலும், தனிப்பட்டவர்கள் இடம் கொடுப்பதா யிருந்தாலும், அந்த யோசனையை சில நாட்களுக்கு முன்னால் ஏற்றுக்கொண்டிருக்க முடியும். அது முடியாத காரணத்தால், இந்த மருத்துவமனையை யொட்டி, ஏறத்தாழ ஒரு ஏக்கரா நிலம் தேவஸ்வம்—அல்லது வேறு ஏதோ அற நிலையத்தைச் சார்ந்த நிலம் கிடைக்கும் என்று, அதை அடிப்படையாக வைத்து பல மாடிக் கட்டடம் கட்டுவதன் மூலம் மருத்துவ மனையின் வளர்ச்சிக்கு ஆவன செய்ய முடியும் என்று ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்ன ஆலோசனையின் மீது இப்பொழுது இந்த வேலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தேசிய விநாயகர் அற நிலையம் என்று அங்கே இருக்கிறது. அதற்குச் சொந்தமாக ஏறத்தாழ இரண்டு ஏக்கரா நிலம் இருக்கிறது. அது பாழடைந்த குளமாக இருக்கிறது. அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆதலால், அதை உடனடியாக வாங்கி அதில் அந்தக் கட்டடத்தைக் கட்ட அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இப்பொழுது கட்டுகிற கட்டடத்திற்காக இப்பொழுதுள்ள இடத்திலேயே ஒரு சிறு இடம் மட்டும் அதோடு சேர்க்கப்படக்கூடிய நிலை இருந்தது. ஆனால், அதுபற்றி இப்பொழுது விவரமாகத் தெரியவில்லை. அவர் சொல்கிற நிலம் ஒருவேளை மருத்துவ மனையோடு ஒட்டிய நிலமாக இருந்தால் ஏற்றுக்கொள்ள முயற்சிக்கலாம். ஆனால், குளம் ஏதாவது இருந்தால், அதைத் தூர்த்து அங்கே கட்டடம் கட்டுவதற்கு இரண்டு ஆண்டுக் காலம் ஆகும்.

TRUTH ALONE TRIUMPHS